செ.எண்.209 நாள்:27.03.2018

<u>ஓய்வூதியர்களுக்கான வருடாந்திர நேர்காணல் பத்திரிக்கைச்செய்தி</u>

திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகளின் மூலம் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்று தற்போது கருவூலங்களுக்கு வரப்பெற்றுள்ள ஓய்வூதியதாரர்களுக்கு 2018-19 ம் ஆண்டுக்கான நேர்காணல் 02.04.2018 அன்று முதல் ஜீன்.2018 வரை நடைபெற உள்ளது. எனவே ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை கீழ்க்கண்ட ஆவணங்களுடன் நேர்காணலுக்கு ஆஜராகிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1) ஓய்வூதிய புத்தகம் (அசல்)

2) ஆதார் அட்டை ( நகல்)

3) வங்கி கணக்குப்புத்தகம் (அசல் மற்றும் நகல்)

4) குடும்ப அட்டை (நகல்)

5) நிரந்தர கணக்கு எண் (நகல்) மற்றும்

6) தங்களின் தற்போதைய முகவரி, இரத்த வகை ( Blood Group), செல்லிடப்பேசி (Cell Phone No), அல்லது தொலைபேசி எண் ( Tele Phone No), மின்னஞ்சல் முகவரி, குடும்ப ஓய்வூதயர்கள் தவிர அனைவரும் தாங்கள் ஓய்வு பெற்ற தேதியில் என்ன பதவியில் இருந்தீர்கள்?, என்ன ஊதிய விகிதம் (Scale of pay), என்ன படிநிலை – A or B or C or D ஆகிய விபரங்களுடன் ஆஜராகவும்,

7) மேலும் தாங்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவராக இருந்தால் கூடுதலாக மறுமணம் புரியாமை சான்றும் மேலும் அசராணை எண்.325, நிதி(ஓய்வூதியம்) துறை நாள்: 28.11.2011 ன்படி குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் திருமணம் / மறுமணம் புரியாமை சான்று மற்றும் வருமான சான்று ஆகியவற்றுடனும் நேரில் ஆஜராகிட கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேலும் “ஜீவன் பிரமான்” (www.jeevanpramaan.gov.in) என்ற இணைய தளம் வாயிலாக சம்பந்தப்பட்ட கருவூலங்களுக்குச் செல்லாமலேயே அருகில் உள்ள e. சேவை மையம் மூலமாக நேர்காணலை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே நேர்காணலுக்கு நேரிடையாக வர இயலாதோர்கள் இச்சேவையினைப் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதைத் தவிர உடல் நலிவுற்ற நிலையில் உள்ளோர் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் நிலைக்கு மேல் உள்ள வருவாய் அலுவலர்கள் அல்லது வங்கி மேலாளர் மூலம் வழங்கப்பட்ட வாழ்நாள் சான்றிதழை மேலே 1 முதல் 7 வரை கூறப்பட்ட ஓய்வூதிய விபரங்களுடன் தாங்கள் ஓய்வூதியம் பெறும் கருவூலத்தில் சமர்ப்பிக்கலாம்.

வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள் வெளிநாட்டிலுள்ள மாஜிஸ்திரேட், நோட்டரி பப்ளிக், வங்கி மேலாளர் அல்லது இந்திய தூதரக அலுவலரிடம் வாழ்வுச் சான்று பெற்று இக்கடிதத்தில் மேலே 1 முதல் 7 வரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்களின் அனைத்து நகல்களையும் இணைத்து அதில் தங்களின் ஓய்வூதிய கொடுவை எண் (PPO No.)குறிப்பிட்டு ஓய்வூதியம் பெறும் கருவூலத்திற்கு சமர்ப்பிக்கலாம்.

மேலும் தாங்கள் மேலே குறிப்பிட்ட காலத்திற்குள் ( ஜீன்.30 -2018) நேரில் வரவோ அல்லது வாழ்வுச்சான்று கொடுக்கத் தவறும்பட்சத்தில் தங்களின் ஓய்வூதியம் ஆகஸ்ட்.2018 முதல் நிறுத்தி வைக்கப்படும் என்றும் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.